**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**

Ang Mo Kio Tamil Methodist Church

*23rd நவம்பர் / November 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

**Bible Society Sunday**

| | |
|---|---|
| † **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. திமோதி ஆனந்த்**<br>Mr. Timothy Aananth |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. திமோதி ஆனந்த்**<br>Mr. Timothy Aananth |
| † **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**காது குளிரப் பாடுங்கள்**

*1. காது குளிரப் பாடுங்கள் கிருபா சத்தியம்*
*புத்தி தெளியக் காட்டுங்கள் திவ்விய வசனம்*
*வெல்க சத்திய வேதம் வாழ்க நித்திய வேதம்*

**அமிர்தமே, அற்புதமே திவ்விய சத்தியம்**
**அமிர்தமே, அற்புதமே திவ்விய சத்தியம்,**

*2. நல்ல செய்தியைக் கூறுமேன் கிருபா சத்தியம்*
*பாவ நாசரைக் காட்டுமேன் திவ்விய வசனம்*
*வான வருஷமாரி ஞான பொக்கிஷவாரி.*

*3. வேதநாயகர் பொழியும் கிருபா சத்தியம்*
*ஜீவ மங்கள மொழியும் திவ்விய வசனம்*
*இயேசு என்தனைப் பாரும் நித்தம் என்தனைக்காரும்*

| | |
|---|---|
| † **மாறி வாசித்தல் 47ம் ஞாயிறு**<br>"சங்கீதம் 139" | **சபையார் இணைந்து**<br>Congregation |

"உம்முடைய ஆவிக்கு மறைவாக
எங்கே போவேன்?"

Psalter Reading – "Psalm 139"

| | |
|---|---|
| † **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

| | |
|---|---|
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| † **காணிக்கைப் பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**சத்திய வேதத்தைத் தினம் தியானி**

**சத்திய வேதத்தைத் தினம் தியானி,**
**சகல பேர்க்கும் அதபிமானி.**

**உத்தமஜீவிய வழிகாட்டும் உயர்வானுலகில் உனைக்கூட்டும்**

*1. வாலிபர் தமக்கூண் அதுவாகும் வயோதியர்க்கும் அதுணவாகும்*
*பாலகர்க்கினிய பாலும் அதாம் படிமீ தாத்மபசி தணிக்கும்*

*2. சத்துருப் பேயுடன் அமர்புரியும் தருணம் அது நல் ஆயுதமாம்;*
*புத்திரர் மித்திரரொடு மகிழும் பொழுதும் அதுநல் உறவாகும்.*

*3. புலைமேவிய மானிட ரிதயம் புனிதம் பெறுதற்கதுமருந்தாம்*
*நிலையா நரர்வாணாள் நிலைக்க நேயகாய கற்பம் அதாம்.*

*4. கதியின் வழிகாணாதவர்கள் கண்ணுக்கரிய கலிக்கம் அது*
*புதிய எருசலேம்பதிக்கு போகும் பயணத் துணையும் அனு,*

*5. மாந்தர் ரக்ஷிப்படையும் வழி வழுத்தும் தேவவார்த்தை அது*
*வேந்தர் அமைச்சர் முதலெவர்க்கும் விதித்த பிரமாணமும் அதுவே,*

| | |
|---|---|
| † **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| † **திருமறைப் பாடம்**<br>Scripture Reading<br>***ஏசாயா 55 : 6 – 11***<br>Isaiah 55 : 6 - 11 | **திருமதி. மிரியம் சினேகா**<br>Mrs. Miriam Sneha |
| **அருளுரை**<br>Sermon | **மறைதிரு. டாக்டர். சியா பெங் ஹாக்**<br>Rev. Dr. Chia Beng Hock |

✝ **அர்ப்பணகீதம்** Offertory & Closing Song — **சபையார் இணைந்து** Congregation

**<u>சத்திய வேதம் பக்தரின் கீதம்</u>**

**சத்திய வேதம் பக்தரின் கீதம்**
**சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்**
**உத்தம மார்க்கம் காட்டும்**
**சத்திய வேதம்**

**எத்தனை துன்பம் துயரம் வந்தும்**
**பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்**

*1. நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்*
*சுத்த பசும் பொன் தெளிந்திடும் தேன்*
*இதயம் மகிழும் கண்கள் தெளியும்*
*இருண்ட ஆத்மா உயிரடையும்*

*2. பேதைகளிடம் ஞானம் அருளும்*
*வேதபுத்தகம் மேன்மை தரும்*
*இரவும் பகலும் இதன் தியானம்*
*இனிமை தங்கும் தனிமையிலும்*

*3. வேதப்பிரியர் தேவப் புதல்வர்*
*சேதமடையா நடந்திடுவார்*
*இலைகள் உதிரா மரங்கள் போல*
*இவர்கள் நல்ல கனி தருவார்*

*4. உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்*
*கள்ளங் 'கபடெல்லாம் அகற்றும்*
*கடிந்து கொள்ளும் கறைகள் போக்கும்*
*கனமடைய வழி நடத்தும்*

*5. கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி*
*கன் மலையும் நொறுக்கிடுமே*
*இதய நினைவை வகையாய் அறுக்கும்*
*இருபுறமும் கருக்குள்ளதே*

*6. வானம் அகலும் பூமி அழியும்*
*வேத வசனம் நிலைத்திருக்கும்*
*பரமன் வேதம் எனது செல்வம்*
*பரவசம் நிதம் அருளும்*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **<u>மனப்பாட வசனம்</u>** <u>Memory Verse</u> — **சபையார் இணைந்து** Congregation

***எபேசியர் 5 : 27***
Ephesians 5 : 27

***27. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing